பதில்கள் கொடுக்க முடியும். துணைக் கேள்விகள் கேட்பதிலும், பதில்கள் கொடுப்பதிலும் எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும் என்றும், நானும் தாராளமாக நடந்துகொள்ள எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

மூர் அங்காடி எதிரிலுள்ள நடைபாதைக் கடைகள்

*255 வினா—திரு. மா. பா. சாரதி: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மூர் மார்க்கெட்டுக்கு எதிரில் உள்ள நடைபாதைக் கடைகளை அகற்றிவிடும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆம் எனில், அந்தக் கடைகள் வேறு எந்த இடத்திற்கு மாற்றப்படும் ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) அரசின் பரிசீலனையில் இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

Sweedish Mission Hospital in Tiruppathur

*256 *Q.*—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether any financial assistance has been given to the Sweedish Mission Hospital in Tiruppathur, Ramanathapuram district during 1969–70–71–72; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

பொள்ளாச்சியில் அரசு மருத்துவ மனை

*257 வினா—திரு. அ. ப. சண்முகசுந்தரம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொள்ளாச்சி அரசினர் மருத்துவ மனையில், பல் வைத்தியம், கண் வைத்தியம் குடும்பக்கட்டுப்பாட்டுத் துறை ஆகியவற்றுக்குப் புதிதாக மருத்துவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்களா ?

(இ) ஆம் எனில், இவற்றிற்கு அங்கு கட்டட வசதிகள் செய்யப்பட்டுள்ளனவா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) பொள்ளாச்சி அரசினர் மருத்துவ மனையில் பல் வைத்தியம், குடும்பக் கட்டுப்பாடுத் துறை ஆகியவற்றிற்காகப் புதிதாக மருத்துவ அதிகாரிகள் நியமிக்கப்பட்டுவிட்டனர். கண் வைத்தியப் பகுதி இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை.

(இ) மேற்கண்ட பகுதிகளுக்குத் தற்போது தனிக் கட்டட வசதி இல்லை.